---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் முக்கியான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான

கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நிறுவகத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் ரூபா 10,447,500 கிரயத்திலான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் மேலும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது. 2019 ஆம் ஆண்டில் அவ் வாகனங்கள் மீளாய்வு செய்யப்பட்டு கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் பயன்படு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு பெறுமானத்தேய்வினை மேற்கொள்வதற்காக குறித்துக்கொள்கின்றேன் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் கூட்டுறவு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 24,000,000 ஆன கடன் மீதி நடைமுறையல்லாத மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களாக வெவ்வேறாக இனங்காணப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்வதற்குள்ள மதிப்பீட்டுத் தொகை நடைமுறைப் பொறுப்பின் பதிவு செய்யப்பட்டு சேமிப்புக்கள் நடைமுறையல்லாத பொறுப்பின கீழ் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------------------- | ---------------------- | ------------------ |
| | கட்டிட மீள்மதிப்பீட்டின் போது கட்டிடங்களின் திரட்டிய பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 1,151,977 கூடுதலாக கணக்கீடு செய்த காரணத்தினால் மூலதன ஒதுக்கம் அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்பு சரியானது. 2019 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மீண்டெழும் செலவினத்திற்காக திறைசேரி யிடமிருந்து கிடைத்த நிதிஏற்பாடு ரூபா 30,530,000 ஆக இருந்த போதிலும், முன்னைய ஆண்டுகளில் கிடைத்த திறைசேரி ஏற்பாடுகளிலிருந்து சேமிக்கப்பட்ட ரூபா 543,744 மற்றும் ஏனைய சீராக்கங்கள் செய்யப்பட்டு ஆண்டின் வருமானமாக ரூபா 31,134,685 தொகை செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் திறைசேரி மானியங்கள் ரூபா 604,685 கூடுதலாக கூட்டப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்குகின்றேன் | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டின் கட்டிட பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 1,269,014 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்குகின்றேன் | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.5.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு கணக்கு விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா 148,899,224 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாமல் இருந்தது.

| விடயம் | | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (i) | இயந்திர உபகரணங்கள் | 103,064,255 | | இயந்திர உபகரணங்கள், தளபாடங்கள, வாகனங்களுக்குரிய | சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்த நடவடிக்கை |
| (ii) | தளபாட உபகரணங்கள் | 45,834,969 | அட்டவணைகள் | அட்டவணைகள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எடுக்க வேண்டும் |
| | | --------------- | | | |
| | | 148,899,224 | | | |
| | | ======= | | | |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 7 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 5,939,694 ஆக இருந்ததுடன் அதில் 1 வருடத்திற்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான காலமாகக் காணப்பட்ட மீதிகளின் | அறவிடவேண்டிய பணத்தை விரைவில் அறவிடுவதற்கு தேவையான தெவையான மயற்சிகளை எடுத்து அதன் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.நடவடிக்கை எடுக்கப்படும் | அறவிட வேண்டிய பணத்தைத் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுமொத்தம் ரூபா 1,730,268 ஆகவும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாத மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 879,859 ஆகவும் இருந்தன. | | |
| (ஆ) | 2005 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக முன்கொண்டு வரப்பட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து கிடைக்க வேண்டிய பெறுமதி சேர் வரி மீதி ரூபா 33,933,319 தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தடுன் கலந்துரையாடப்பட்டதுடன் மீளப் பெற்றுக்கொள்வதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய முறை தொடர்பாக வாய்மொழிமூல னுமதி கடைத்துள்ளது. அதன் பிரகாரம் நடவடிக்கைகளை நடவடிக்கை எடுக்கப்படு | மீதியை தீர்வு செய்யப்பட வேண்டும் |

### 1.6.2. செலுத்த வேண்டிய தொகை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ---------------------------------------------- | ---------------------- | --------------------- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 5 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 98,001,141 ஆக இருந்ததுடன், அதில் 1 வருடத்திற்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான காலமாக தீர்க்கப்படாதுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 62,480,490 ஆகவும், 5 வருட காலத்தை விஞ்சி தீர்க்கப்படாதுள்ள மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 34,365,853 ஆகவும் காணப்பட்டன. | 5 வருட காலத்தை விஞ்சிய மீதி ரூபா 15,106,285 தொகை கேட்போர் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குரிய நிறுத்தி வைத்தல் தொகையாகும். இது தொடர்பாக தற்போது அமைச்சரவை பத்திரமொன்று அமைச்சிற்கு தொடர்புபட்டுள்ளதுடன் அந்த அமைச்சரவை பத்திரத்திற்கு கிடைக்கும் அங்கீகாரத்தின் பேரில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்கின்றேன். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 47 ஆம் பிரிவு | சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு கணக்கீடு செய்யும் போது வாழ்க்கை செலவினப் படிகள் கொடுப்பனவு அடிப்படையாக கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறில்லாமல் 2006 ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஆரம்ப சம்பளத்தை கருத்திற் கொண்டு ஊழியர் சேமலாப நிதியம் கணக்கீடு செய்யும் காரணத்தினால் ஊழியரின் பங்களிப்பான ரூபா 1,673,929 மீளாய்வாண்டின் போது நிறுவனத்தில் கல்வி மற்றும் பயிற்சி கணக்கிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2019 மே மாதம் 31 இல் நடைபெற்ற முகாமைத்துவ சபை கூட்டத்தின் போது ஊழியர்களுக்காக நிறுவகத்தினால் செலுத்தப்பட்ட தொகை மீண்டும் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரகாரம் ஊழியர் பங்களிப்பு அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 104(4) | 2014 யூன் 01 ஆந் திகதி விபத்திற்குட்பட்ட நிறுவனத்தின் மோட்டார் வாகனமொன்று 04 ஆண்டு காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் அலுவலக வளவில் இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகும் வகையில் | குழுவொன்று நியமிக்கப்பட்டு விபத்து தொடர்பாக அக்குழுவின் பரிந்துரை பெற்றுக் கொண்டு தொடர் நடவடிக்கைளை எடுப்பதற்காக 2019.05.31 இல் உள்ளவாறு நடை பெற்ற முகாமைத்துவ | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விளைவற்றுக் காணப்பட்டது. அத்துடன் பூரண அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. | |
| (இ) | 2013 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.3 பந்தி | நிதி அமைச்சரின் அல்லது விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படாமல் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 5 மில்லியன் தொகையும் மீளாய்வாண்டின் போது 10 மில்லியனும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன | நடைமுறைக் கணக்கில் காணப்படுகின்ற மீதிகளுக்காக வருமானம் உழைக்கும் நோக்கில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட போதும் இதற்காக நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள முடியாமல் போனது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,914,386 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,509,280 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 405,106 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வருமானம் அதிகரித்தமை காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கி வருமானம் உழைக்கும் நோக்கில் ரூபா 257 மில்லியன் செலவு செய்து | பயன்பாட்டினை அதிகரிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் | வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | 1127 பார்வையாளர்களுக்கான இடவசதிகளுடன் கூடிய இரண்டு விராந்தைகளுடன் கூடிய கேட்போர் கூடம் 2018 ஆம் ஆண்டின் போது 29 சந்தர்ப்பங்களில் மாத்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன. இந்த கேட்போர் கூடத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 160 கதிரைகளுடன் கூடிய சர்வதேச மட்டத்தில் செயலமர்வுகளை நடத்தக்கூடிய வகையில் இரண்டு மாநாட்டு மண்டபங்கள் 2014 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டன. | மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 02 பிரதான விராந்தைகள் மற்றும் சிற்றுண்டிச்சாலை என்பவற்றின் பயன்பாட்டை அதிகரித்துக் கொள்வதற்காக தாமரைக் குள கலையரங்கம் மற்றும் பண்டாரநாயக்கஞாபகார்த்த மண்டபத்தின் உத்தியோகத்தர்களும் உள்ளடக்கப்படும் வகையில் நியமிக்கப்பட்ட குழுவொன்றின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்ட எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | நிறுவகத்தின் பல்நோக்கு கட்டிடத்தில் நிலமாடியில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 2979 சதுர அடி அளவிலான வளவில் நடாத்திச் செல்லப்பட்ட மாதிரி கோப்சிட்டி விற்பனை நிலையம் 2017 ஆகஸ்ட் 25 ஆந் திகதி மீண்டும் நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வளவினை ஆக்கபூர்வமான செயற்பாடொன்றிற்கு பயன்படுத்தாமையால் மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 720,000 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | நிறுவகத்தின் பல்நோக்கு கட்டிடத்தில் நிலமாடியில் நடாத்திச் செல்லப்பட்ட Co-op City மாதிரி விற்பனை நிலையம் அவர்களின் தேவையின் பேரில் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டதுடன் தற்போது அவ்வளவில் நிறுவகத்தின் தொழில் பயிற்சி பாடநெறி கற்பித்தல் நடவடிக்கைகளுக்காகவும் தேவையான சந்தர்ப்பங்களில் பரீட்சை நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. | கட்டிடத்தை பயன்படுத்தி வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) பயிற்சி வழிகாட்டலினை இலக்கிடப்பட்ட 4 பாடநெறி களை நடப்பாண்டில் நடாத்தாமையால் ரூபா 927,500 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | போதியளவு மாணவர்கள் இல்லாமையால் இப்பாடநெறி நடாத்தப்படவில்லை. | பயிற்சி வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட இலக்கிடப்பட்ட பாடநெறிகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 16,000,000 செலவில் ஆடம்பர சொகுசு முறையில் அபிவிருத்தி செய்யப்பட்ட நிறுவகத்திற்குச் சொந்தமான சுற்றுலா விடுதி மீளாய்வாண்டின் போது 29 சந்தர்ப்பங்களில் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | விரிவான விளம்பரம் மற்றும் கட்டண திருத்தங்கள் மூலம் ஒதுக்கீடு செய்யும் அளவினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்க் கொள்கின்றேன் | பயன்பாட்டினை விட மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டின் போது நிறுவகத்தில் பயிற்சி பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக தேசிய பாதீட்டுத் திணைக்களத்திடமிருந்து கிடைத்த ரூபா 6,000,000 தொகையிலிருந்து ரூபா 2,623,316 தொகையும் கலையரங்கத்தை | பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்தும் செயற்திட்டத்தில் எஞ்சயிருந்த ரூபா 2.6 மில்லியன் தொகை 2019 ஆம் ஆண்டின் போது கணனிகள் கொள்வனவு | நிதியம் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிர்மாணிப்பதற்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 68,445,000 தொகையிலிருந்து ரூபா 29,755,000 தொகையும் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் மூலதனச் செலவினத்திற்காக கிடைத்த தொகையில் ரூபா 17,773,317 தொகையும் வங்கி நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | செய்வதற்கும் கேட்போர் கூடத்தின் கொடுப்பனவிற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் ரூபா 27.55 மில்லியன் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளது. ரூபா 17.77 மில்லியன் தொகையில் அரச இல்லங்களை திருத்தம் செய்வதற்காக முற்பணம் மற்றும் இடைக்கால பட்டியல்களை கொடுப்பனவு செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டன. | |

**3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிறுவனத்தின் வர்த்தக பெறுமதியுடன் கூடிய காணிப் பகுதி அமைந்துள்ள பழைய அலுவலகக் கட்டிடம் 2008 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் இதனை திருத்தியமைக்கவோ அல்லது புதிய நிர்மாணமொன்றோ மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படவில்லை. மேலும் மஹாவலி கட்டிட வளவாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டிடமொன்று 2001 ஆம் ஆண்டு முதல் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | பதவியணி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும் போது இவ்வளவு பயன்பாட்டிற்கு எடுக்கப்படும். | நிறுவகத்தற்கு சொந்தமான சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும் |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 06 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பிற்காக 3 சந்தர்ப்பங்களில் 9 பத்திரிகைகளில் விளம்பரங்களை வெளியிடுவதற்கு ரூபா 454,589 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | மீளாய்வாண்டில் ஆட்சேர்ப்பிற்காக ஒரு விளம்பரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த விளம்பரத்திற்காக ரூபா 192,220 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அவ்விளம்பரத்தின் பிரகாரம் பணிப்பாளர் நாயகம் மற்றம் பணிப்பாளர் (கல்வி மற்றும் அபிவிருத்தி) பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. | திட்டமிட்டு செயற்பட்டு பயனற்ற செலவினத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ தீர்மானத்தின் பிரகாரம் விரிவுரையாளர் ஒருவர் மாதமொன்றுக்கு குறைந்தது 60 மணித்தியாலங்கள் வீதம் 04 விரிவுரையாளர்களால் 2018 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட வேண்டிய மொத்த விரிவுரை மணித்தியாலங்கள் 2880 ஆக இருந்த போதிலும், ஆண்டினுள் 1904 விரிவுரை மணித்தியா லங்கள் நடாத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ஆண்டின் 976 மணித்தியாலங்கள் குறைவாக விரிவுரை நடாத்தப்பட்டிருந்தது. | மாதமொன்றுக்கு 60 விரிவுரை மணித்தியாலங்களை மேவுகை செய்யுமாறு விரிவுரையாளர்கள் அறிவுறுத்தப்பட்டு தேவையான ஆலோசணைகள் வழங்கப்பட்டுள்ளன. | முகாமைத்துவ தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

---------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | முகாமைத்துவத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு “நிகழ்ச்சிநிரல்” பிரகாரம் ஒவ்வொரு நிறுவனத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்வதற்கும் செயன் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | 2018 ஆம் ஆண்டின் போது அறிமுகமொன்று இல்லாத போதிலும் 2019 செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கும் போது அதன் செயற்பாடுகள் ஊடாக 17 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் ஊடாக எந்த நோக்கத்தை மேவுகை செய்வது என்பதை பிரதிபலிக்கும் வகையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டு குறிகாட்டிகள் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |